[24th September 1958

Strike Notice by Teachers

* 476 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, திருப்பத்தூர் இராமகிருஷ்ண உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 1958–ம் ஆண்டு பிப்ரவரி 10-ல் வேலை நிறுத்த நோட்டீஸ் மேனேஜ்மெண்டாருக்கு அனுப்பியுள்ளார்களா ?

(ஆ) அப்படியானால், அவர்களின் கோரிக்கை என்ன ?

(இ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The teachers requested that they might be paid their arrear salary from 1st December 1957 and enhanced dearness allowance from 1st November 1956 and that their salary might be paid regularly every month.

(*c*) The teachers have since been paid the arrears of salary from December 1957 to February 1958 and arrears of dearness allowance at enhanced rate from November 1956 to February 1958.

SRI V. K. KOTHANDARAMAN : தனியார் நடத்தும் பாடசாலைகளிலே அடிக்கடி இது போன்று மாதக்கணக்கிலே சம்பளம் கொடுக்கப்படாதது மட்டும் அல்ல, குறைந்த சம்பளத்தைக் கொடுத்து அதிகச் சம்பளத்திற்கு ரசீது வாங்கிக்கொள்ளும் நிலைமை இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : இந்தப் பள்ளிக்கூடத்திலேயா ?

SRI V. K. KOTHANDARAMAN : ஆகையால் இந்த உபாத்தியாயர்களுக்கு நேரடியாகச் சம்பளம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பல புகார்கள் வந்தன. குறைந்த சம்பளத்தைக் கொடுத்து அதிகச் சம்பளத்திற்கு ரசீது வாங்குவதாக உபாத்தியாயர்களே புகார் செய்யவில்லை. கனம் அங்கத்தினருக்கு புகார் எப்படி வந்ததோ எனக்குத் தெரியாது.

Filaria

* 477 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to control Filaria?

THE HON. SRI M. A. MANICKAVELU : A paper [a] is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : கும்பகோணம், காஞ்சீபுரம் போன்ற பிரதேசங்களில் சர்க்கார் எடுத்த நடவடிக்கையின் காரணமாகவும், மறுபடியும் மறுபடியும் இந்த வியாதி வருவதன் காரணமாகவும் விசேஷ நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : விசேஷ நடவடிக்கைதான் எடுக்கப்பட்டு வருகிறது. (சிரிப்பு.) முன்னே " கன்டிரோல் ஸ்கீம் " என்று இருந்தது. இப்பொழுது " எரோடிகேஷன் ஸ்கீம் " என்ற பெயரில், அதாவது அதை ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்ற வகையில் 4 யூனிட்டுகள் வேலை செய்துகொண்டு வருகின்றன. ஐந்தாவது யூனிட்டை ஆரம்பிக்கப் போகிறோம். ஆறு யூனிட்டுகள் வைத்து நடத்தி இதைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று உத்தேசித்திருக்கிறோம்.

---

[a] Printed as Appendix I on pages 662–663 infra.